**அசல் வழக்கு எண். 237 /2023**

வா..சா. **– 1 (ராஜேஸ்வரி)**

**நாள். 30.08.2024**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

தாவா சொத்தை சுப்பா கவுண்டர் என்பவரும் பிரதிவாதி மலர்க்கொடியும் சேர்ந்து வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 மூலமாக கிரயம் வாங்கியுள்ளார்கள் என்றால் சரிதான். வா.சா.1 மற்றும் வா.சா.ஆ.2 ன் அசல் ஆவணங்கள் என்னிடம் தான் உள்ளன என்றால் சரிதான். அந்த அசல் ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியும். என் தகப்னாருக்கு சவடமுத்து, சௌடீஸ்வரி, நான், என் தாயார் வள்ளியம்மாள் ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான். தாவா சொத்தில் 1664 சதுரடி விஸ்தீரணத்தை என் அப்பாவும் பிரதிவாதி மலர்க்கொடியும் சேர்ந்து 26.09.2003 தேதிய கிரையப் பத்திரப்படி சந்தனதேவர் என்பவருக்கு விற்றுள்ளார்கள் என்றால் சரிதான்.ஏற்கனவே விற்கப்பட்டுள்ள 1664 சதுரடி விஸ்தீரணத்தை வழக்கு சொத்து விவரத்தில் கழிக்காமல் வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரிதான். அதனால் வழக்கில் தவறான சொத்து விவரம் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. 02.08.2013ம் தேதி என் தகப்பனார் காலமாகிவிட்டார். 18.06.2007ல் என் அப்பா ஒரு உயில் ஆவணம் எழுதி வைத்துள்ளார். அந்த உயில் ஆவணத்தில் 3ம் பக்கத்தில் எனக்கு ஸ்ரீநிவாஸ் என்ற மகனும் தர்ஷனபிரியா என்ற மகளும் இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் குழந்தைகள் இருவரும் தற்போது 18 வயது பூர்த்தி அடைந்து விட்டார்கள் என்றால் சரிதான். உயில் ஆவணம் 4வது பக்கத்தில் என் தகப்பனார் தாவா சொத்துக்கள் அல்லாமல் மற்ற சொத்துக்கள் பூர்வீக சொத்துக்களிலிருந்து கிடைத்த வருமானத்தை வைத்து வாங்கப்பட்டது என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான். உயில் ஆவணத்தில் 8வது பக்கத்தில் சி ஷெட்யூலில் உள்ள சொத்துக்கள் எனக்கும் என் குழந்தைகளுக்கும் பாத்தியப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் குழந்தைகள் இருவருக்கும் பாத்தியப்பட்ட சொத்துக்ளை பொறுத்து அவர்கள் வழக்கு எதுவும் போடவில்லை. நான் மட்டுந்தான் தனியாக வழக்கு

போட்டுள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் எனது மகனையும், மகளையும் தரப்பினராக சேர்க்காமல்தான் வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரிதான். 18.06.2007 உயில் ஆவணம் தொடர்பாக எனக்கும் என் சகோதர, சகோதரிகள் மற்றும் தாயார் இடையே பிரச்சனைகள் இருந்து வருகின்றன என்றால் சரியல்ல. உயில் ஆவணம் சம்மந்தமாக எங்களுக்குள் பிரச்சனை இருந்து வருவதால்தான் அவர்களை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. என் உடன்பிறந்த சகோதர, சகோதரிகள், மற்றும் என் குழந்தைகள் ஆகியோரை இந்த வழக்கில் தரப்பினரான சேர்க்கவில்லை என்றும் அதனால் இந்த வழக்கில் பாகப்பிரிவினை முறைப்படி ஏற்படுத்த முடியாது என்றால் சரியல்ல. ஆரம்பத்தில் இருந்து என் தகப்பனார் சுப்பாகவுண்டரும், பிரதிவாதி மலர்க்கொடியும் தாவா சொத்துக்களை அனுபவித்து வருவதில் பிரச்சனைகள் எதுவும் ஏற்படவில்லை என்றால் சரிதான். என் தகப்பனார் காலத்திலும், அவர் இறந்த பிறகும் அவரது வாரிசுகளிடம் இந்த பிரதிவாதி தாவா சொத்துக்களை பாகம் பிரித்துக் கொடுப்பதற்காக தயாராக இருந்து வந்ததாக சொல்லி வந்தார் என்றால் சரிதான். ஆனால் 18.06.2007 உயில் தொடர்பாக எங்கள் குடும்பத்தார்களுக்குள் பிரச்சனை ஏற்பட்டு வந்தததால் பாகம் பிரித்து தர முடியாது என்று நாங்கள் கூறி வந்தோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2,. கிரைய ஆவணங்களின் படி என் தகப்பனாருக்கு 3/4 பாகம் மற்றும் பிரதிவாதி மலர்க்கொடிக்கு 1/4 பாகமும் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2. கிரையப் பத்திரங்கள் கேரள மாநிலம் கொளத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து அமைந்துள்ள இடத்திற்கான பத்திரப்பதிவு அலுவலகம் திண்டுக்கல், ஜாயிண்ட் – II சார்பதிவாளர் அலுவலகம் என்றால் சரிதான். கேரளாவில் பத்திரங்கள் பதிவு செய்யப்பட்டதால் இந்த பிரதிவாதி மேற்படி பத்திரங்களைப் பொறுத்து குறைவான முத்திரை தீர்வை மற்றும் பதிவு கட்டணத்தை கட்டுவதற்காக திண்டுக்கல் ஜாயிண்ட்–II சார்பதிவாளர் அலுவலகத்தில் மனு செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த மனுவில் மாவட்ட பதிவாளர் 21.10.2021 ம் தேதி உத்தரவு பிறப்பித்துள்ளார் என்றால் சரிதான். அந்த உத்தரவுப்படி குறைவு முத்திரை தீர்வை மற்றும் பதிவு கட்டணத்தை கட்ட தயாராக இல்லை என்றால்

சரியல்ல. அதனால் பாகம் பிரித்துக் கொடுப்பதற்கு நாங்கள்தான் தயாராக இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கான பட்டா கிரையம் செய்தவர்களான திருமலை செட்டியார் மகன் முருகேசன், மற்றும் திருமலை செட்டியாரின் மனைவி பாண்டீஸ்வரி ஆகியோரின் பெயரில்தான் தற்போதும் இருந்து வருகிறது என்றால் சரிதான். அதனால் பாகம் பிரித்துக் கொடுப்பதற்கு நாங்கள் இடையூறு செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. தாவா வழக்கில் என் சகோதர, சகோதரிகள், என் தாயார், மற்றும் என் குழந்தைகள் ஆகியோர்களை தரப்பினராக சேர்க்க எனக்கு ஆட்சேபணையில்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் 2023 ஜுன் மாதம் வரை வாடகைக்கு இருந்து வந்தார்கள் என்றால் சரிதான். அந்த வாடகை தொகையை என் தகப்பனாரும், இந்த பிரதிவாதியும் விகிதாச்சாரப்படி பிரித்து எடுத்துக் கொண்டார்கள் என்றால் சரிதான். 2023 ஜூன் மாதத்திற்கு பிறகு தாவா சொத்தில் உள்ள மில் தற்போது சும்மாதான் உள்ளது. வாடகைக்கு யாரும் இல்லை என்றால் சரிதான். அதற்கு காரணம் நாங்கள்தான் என்றும் நாங்கள் வாடகைதாரர் யாரையும் வைக்காமல் இருந்து வருகிறோம் என்றால் சரியல்ல. அதனால் பிரதிவாதிக்கு வாடகை வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் மில் சம்மந்தமான கட்டிடமும், தளவாட பொருட்களும், மிஷினரியும் உள்ளன என்றால் சரிதான். மில் ஓடாமல் இருப்பதால் அந்த கட்டிடமும், மிசின்களும் பழுதாகி உள்ளன என்றால் சரியல்ல. என் தகப்பனாரின் மற்ற வாரிசுதாரர்களையும், எனது மக்களையும் சேர்த்து பாக வழக்கு நடத்தும் பட்சத்தில் பிரதிவாதிக்கு 1/4 பாகம் பிரித்துக் கொள்வதற்கு ஆட்சபேணை எதுவும் இல்லை என்றால் சரிதான். அவசியமான தரப்பினார்கள் வழக்கில் சேர்க்காததால் வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

A K MEHBUB ALIKHAN

Digitally signed by A K MEHBUB ALIKHAN
Date: 2024.09.03 19:32:00 +0530

Additional District Judge,

Dindigul.